<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்–2 திருப்பத்தூர் வேலூர் மாவட்டம்</u>

**முன்னிலை : திரு.க.பிரபு. எம்.ஏ., எம்.எல்.,**
**நீதித்துறை நடுவர் எண்.2**
**திருப்பத்தூர்**

2023 ம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாள் வெள்ளிக்கிழமை.
**சி.ஆர்.எம்.பி. எண்.9726/2022**
**F.NO.11171/2022**
**CNR.NO.TNVL1C0111752022**

G.வீராசாமி, த/பெ. கோவிந்தசாமி,
சின்னாரம்படடி மதுரா, திருப்பத்தூர் ...குற்றமுறையிடுபவர்

–/எதிராக/–

1. S.அருள், த/பெ. சண்முகம்,
லண்டன் மிஷின் ரோடு, திருப்பத்தூர்
2. L.ரமேஷ், த/பெ. லோகநாதன்,
பால்நாங்குப்பம் மதுரா, திருப்பத்தூர்

...குற்றஞ்சாட்டப்பட்டவர்கள்

இந்த மனு 03.10.2022 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 28.03.2023 இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.வீரமணி,B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்தும் சான்றாவணங்களையும் சாட்சியங்களையும் பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>உத்திரவு</u>

1. மனுதாரர் இம்மனுவினை கு.வி.மு.ச பிரிவு 156(3) ன் கீழ் எதிர்மனுதாரர்கள் மீது வழக்கு பதிவு செய்து தக்க நடவடிக்கை எடுக்குமாறு தாக்கல் செய்துள்ளார்.

2. மனுதாரர் சின்னாரம்பட்டி மதுரா கிராமத்தில் வசித்து வருவதாகவும், குற்றமுறையிடுபவர் குற்றஞ்சாட்டப்பட்டவர்களிடம் 26.06.2013 ம் தேதியில் பாத்தியப்பட்ட சொத்தினை 22.07.2020 ம் தேதியின்று ரூ.1,31,890/– க்கு கிரயம் பெற்றதாகவும், குற்றமுறையிடுபவரின் குமாரர்கள் வீரமணி மற்றும் நாகமணி ஆகியோர்களும், குற்றஞ்சாட்டப்பட்டவர்களிடம் 16.12.2019 ம் தேதியில் ரூ.2,64,903/– க்கு கிரயம் பெற்றதாகவும், பின்னர் மேற்படி சொத்துக்களை குற்றஞ்சாட்டப்பட்டவர்களிடம் வாங்கும்போது, 26.06.2013 ம் தேதிய கிரயப்பத்திரத்தின் அசல் ஆவணம் (பத்திர எண்.6146/2013) தொலைந்து விட்டதாகவும், இது சம்மந்தமாக திருப்பத்தூர் நகர காவல் நிலையத்தில் CSR No.518/2019 என்று பதிவாகியுள்ளதாகவும், மேலும் 13.12.2019 ம்

தேதியிட்ட அசல் ஆவணம் கிடைக்கவில்லை என்று திருப்பத்தூர் நகர காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் சான்று வழங்கியதாகவும், மேலும் பத்திரிக்கை விளம்பரம் கொடுத்ததாகவும், என கூறி சார்–பதிவாளர் அலுவலகம் மூலம் இணைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்ததால், அதனை நம்பி குற்றமுறையிடுபவரும், அவருடைய குமாரர்களும் கிரயம் பெற்றதாகவும். இந்நிலையில் 28.07.2020 ம் தேதியில் குற்றமுறையிடுபவருக்கு திருப்பத்தூரை சார்ந்த திரு.மேகநாதன் என்பவர் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு ஒன்றை அனுப்பியதாகவும், அந்த அறிவிப்பில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் 26.06.2013 ம் தேதிய கிரயப்பத்திரத்தின் சொத்தில் 1 ஏக்கர் 75 சென்ட் நிலத்தினை மேகநாதனுக்கு 08.06.2016 ம் தேதியன்று ரூ.5,90,000/– க்கு விற்பனை செய்து, கிரயப்பத்திரம் எழுதி கொடுத்ததாகவும் தெரிவித்துள்ளதாகவும், மேற்படி அறிவிப்பின்படி குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் 26.06.2013 ம் தேதிய கிரயப்பத்திரத்தின் அசல் ஆவணம் (பத்திர எண்.6146/2013) என்ற சொத்தை அசல் ஆவணம் வைத்து மேகநாதனுக்கு கிரயம் செய்தது தெரிய வந்ததாகவும், எனவே குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் 26.06.2013 ம் தேதிய கிரயப்பத்திரத்தின் அசல் ஆவணத்தை வைத்து 08.06.2016 ம் தேதி மேகநாதனுக்கு கொடுத்துவிட்டு, பின்னர் அசல் ஆவணம் தொலைந்து விட்டதாக கூறி குற்றமுறையிடுபவரிடம் 22.07.2020 ம் தேதியில் கிரயம் பதிவு செய்து செய்ததாகவும், இது சம்மந்தமாக குற்றமுறையிடுபவர் 10.12.2021 ம் தேதியில் திருப்பத்தூர் நகர காவல் நிலையத்திற்கு புகார் கொடுத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்காததால், 28.12.2021 ம் தேதி திருப்பத்தூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு புகார் அனுப்பி இது சம்மந்தமாக திருப்பத்தூர் கிராமிய காவல்துறை உதவி ஆய்வாளர் திரு.உதயகுமார் அவர்கள் 05.02.2022 ம் தேதி குற்றமுறையிடுபவரை விசாரணை செய்து, இது சம்மந்தமாக வேலூர் நில அபகரிப்பு காவல் நிலையத்திற்கு அனுப்பி விசாரணை செய்து நடவடிக்கை எடுப்பதாக கூறியதாகவும், பின்னர் இது சம்மந்தமாக குற்றமுறையிடுபவர் 23.03.2022 ம் தேதி காவல்துறை துணைத்தலைவர் வேலூர் மாவட்ட அவர்களுக்கும் புகார் கொடுத்தாகவும், மேற்படி புகாரின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காததால், எனவே மேற்படி குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீது இ.த.ச பிரிவுகள் 417, 420, 465, 468, 471 ன் கீழ் வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்கக்கோரி, காவல்துறைக்கு கு.வி.மு.ச பிரிவு 156(3) ன் கீழ் உத்தரவிடுமாறு இம்மனுவில் கோரியுள்ளார்.

3. மேற்படி தன்னுடைய மனுவில் கோரியுள்ள சங்கதிளுக்கு ஆதரவாக, கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார்,

i) 26.06.2013 ம் தேதியிட்ட குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் பெயரிலுள்ள கிரயப்பத்திரத்தின் நகல்.

ii) 16.12.2019 ம் தேதியிட்ட குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் குற்றமுறையிடுபவரின் குமாரர்கள் பெயருக்கு எழுதி கொடுத்த கிரயபத்திரத்தின் நகல்

iii) 22.07.2020 ம் தேதியிட்ட குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் குற்றமுறையிடுபவருக்கு எழுதி கொடுத்த கிரயபத்திரத்தின் நகல்

iv) 28.07.2020 ம் தேதி மேகநாதன் என்பவர் குற்றமுறையிடுபவருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு

v) 10.12.2021 ம் தேதியிட்ட திருப்பத்தூர் நகர காவல் ஆய்வாளர் அவர்களுக்கு அனுப்பிய புகார் மனு நகல்

vi) 13.12.2021 ம் தேதியிட்ட திருப்பத்தூர் நகர காவல் நிலையத்தார் புகாரை பெற்று கொண்டதற்கான ஒப்புதல் அஞ்சல் அட்டை

vii) 28.12.2021 ம் தேதியிட்ட திருப்பத்தூர மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு அனுப்பிய புகார்மனு நகல்

viii) 29.12.2021 ம் தேதியிட்ட திருப்பத்தூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் புகாரை பெற்று கொண்டதற்கான ஒப்புதல் அஞ்சல் அட்டை

ix) 22.03.2022 ம் தேதியிட்ட வேலூர் காவல்துறை துணை தலைவர் அவர்களுக்கு அனுப்பிய புகார்மனு நகல்

x) 25.03.2022 ம் தேதியிட்ட வேலூர் காவல்துறை துணை தலைவர் அவர்கள் புகாரை பெற்று கொண்டதற்கான ஒப்புதல் அஞ்சல் அட்டை

xi) 25.06.2022 ம் தேதியிட்ட தமிழ்நாடு முதலமைச்சர்(தனி பிரிவு) அவர்களுக்கு அனுப்பிய புகார்மனு நகல்

xii) தமிழ்நாடு முதலமைச்சர்(தனி பிரிவு) அவர்கள் புகாரை பெற்று கொண்டதற்கான ஒப்புதல் அஞ்சல் அட்டை

4. மேற்படி மனுதாரரின் மனுவையும் அவர் தாக்கல் செய்துள்ள மேற்படி 1 முதல் 12 வரையிலான ஆவணங்களையும் பரிசீலனை செய்கையில், குற்றமுறையிடுபவர் தனக்கு குற்றஞ்சாட்டப்பட்டவர்களால் ஏற்பட்ட சம்பவம் குறித்து 10.12.2021 அன்று திருப்பத்தூர் நகர காவல் நிலையத்தில் புகார் கொடுத்து, அதன் பேரில் திருப்பத்தூர் நகர காவல் துரையினர் நடவடிக்கை எடுக்காத காரணத்தினால், 28.12.2021 அன்று திருப்பத்தூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு புகார் மனுவையும் அனுப்பி, அதன் அடிப்படையில் இது சம்மந்தமாக திருப்பத்தூர் கிராமிய காவல்துறை உதவி ஆய்வாளர் 05.02.2022 அன்று குற்றமுறையிடுபவரை விசாரணை செய்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதும், பின்னர் இது சம்மந்தமாக 22.03.2022 ம் தேதி வேலூர் காவல்துறை துணை தலைவர் அவர்களுக்கு புகார் கொடுத்தும், அந்த புகார் மனுவில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது தெரிய வருகிறது.

5. பாதிக்கப்பட்ட தரப்பினர் புகார் அளிக்கும் பட்சத்தில் அதன்மீது விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுப்பது காவல்துறையின் அத்தியாவசிய கடமை. அத்தனைய விசாரணையில்

தான் சம்பவம் நடந்தது உண்மையா, இல்லையா என தெரியவரும். மேற்படி சங்கதிகளின் அடிப்படையிலும், ஆவணங்களை பரிசீலனை செய்கையிலும் மனுதாரரின் புகார்மீது காவ்துறையினர் எந்தவித விசாரணையும் மேற்கொள்ளவிலலை என்பது தெரியவருகிறது. எனவே, நீதிமன்றம் பிரிவு 156(3) ன் கீழ் இம்மனுவினை கருத்தில் கொண்டு உரிய உத்தரவு பிறப்பிப்பது நீதியின் பால் உகந்தது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

6. எனவே திருப்பத்தூர் கிராமிய காவல் நிலையத்தார் மேற்படி குற்றமுறையிடுபவரின் புகார் மீது உரிய விசாரணை செய்து அதில் முகாந்திரம் இருக்கும் பட்சத்தில் அதில் சம்பந்தபட்ட நபர்கள் மீது மட்டும் தகுந்த நடவடிக்கை எடுக்கவும், மேற்படி மனுவின் மீது எவ்வித நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது பற்றி இந்நீதிமன்றத்திற்கு உரிய அறிக்கையின் மூலம் தெரியப்படுத்தவும் இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு முழுவதும் என்னால் சொல்ல சொல்ல சுருக்கெழுத்து தட்டச்சரால் கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் காணப்பட்டு 2023–ஆம் வருடம் மார்ச் மாதம் 31 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K PRABU
Digitally signed by K PRABU
Date: 2023.03.31 17:27:28 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
திருப்பத்தூர்.

**இணைப்புகள்.**

**மனுதாரர் தரப்பு சாட்சிகள்** – இல்லை.

**மனுதாரர் தரப்பு ஆவணங்களின் பட்டியல்**

| | |
|---|---|
| ம.த.ஆ.1 | 26.06.2013 ம் தேதியிட்ட குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் பெயரிலுள்ள கிரயபத்திரத்தின் நகல். |
| ம.த.ஆ.2 | 16.12.2019 ம் தேதியிட்ட குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் குற்றமுறையிடுபவரின் குமாரர்கள் பெயருக்கு எழுதி கொடுத்த கிரயபத்திரத்தின் நகல் |
| ம.த.ஆ.3 | 22.07.2020 ம் தேதியிட்ட குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் குற்றமுறையிடுபவருக்கு எழுதி கொடுத்த கிரயபத்திரத்தின் நகல் |
| ம.த.ஆ.4 | 28.07.2020 ம் தேதி மேகநாதன் என்பவர் குற்றமுறையிடுபவருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு |
| ம.த.ஆ.5 | 10.12.2021 ம் தேதியிட்ட திருப்பத்தூர் நகர காவல் ஆய்வாளர் அவர்களுக்கு அனுப்பிய புகார் மனு நகல் |
| ம.த.ஆ.6 | 13.12.2021 ம் தேதியிட்ட திருப்பத்தூர் நகர காவல் நிலையத்தார் புகாரை பெற்று கொண்டதற்கான ஒப்புதல் அஞ்சல் அட்டை |
| ம.த.ஆ.7 | 28.12.2021 ம் தேதியிட்ட திருப்பத்தூர மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு அனுப்பிய புகார்மனு நகல் |

| | |
|---|---|
| ம.த.ஆ.8 | 29.12.2021 ம் தேதியிட்ட திருப்பத்தூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் புகாரை பெற்று கொண்டதற்கான ஒப்புதல் அஞ்சல் அட்டை |
| ம.த.ஆ.9 | 22.03.2022 ம் தேதியிட்ட வேலூர் காவல்துறை துணை தலைவர் அவர்களுக்கு அனுப்பிய புகார்மனு நகல் |
| ம.த.ஆ.10 | 25.03.2022 ம் தேதியிட்ட வேலூர் காவல்துறை துணை தலைவர் அவர்கள் புகாரை பெற்று கொண்டதற்கான ஒப்புதல் அஞ்சல் அட்டை |
| ம.த.ஆ.11 | 25.06.2022 ம் தேதியிட்ட தமிழ்நாடு முதலமைச்சர்(தனி பிரிவு) அவர்களுக்கு அனுப்பிய புகார்மனு நகல் |
| ம.த.ஆ.12 | தமிழ்நாடு முதலமைச்சர் (தனி பிரிவு) அவர்கள் புகாரை பெற்று கொண்டதற்கான ஒப்புதல் அஞ்சல் அட்டை |

**எதிரிகள் தரப்பு சாட்சிகளின் பட்டியல்** – இல்லை.
**எதிரிகள் தரப்பு ஆவணங்களின் பட்டியல்** – இல்லை.

K PRABU Digitally signed by K PRABU Date: 2023.03.31 17:27:23 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
திருப்பத்தூர்.